87

உ

ஓம்.

சிவமயம்.

ஸ்ரீ காளியம்மன்
பைந்தமிழ்ப் பாசுரம்.

OFFICE OF THE REGISTRAR
No.
6 - OCT 1927
MADRAS

இஃது

நண்பர்களின் வேண்டுகோட்கிணங்கி

கந்தசாமி முதலியார் குமாரன் செந்தமிழ் மாணவன்

ஐ. க. பெருமாள்சாமியால்

இயற்றப்பட்டு குமாரநகர் தேவாங்கர்குலம் ஜெ. வெ.

இரங்கசாமி செட்டியார் குமாரர்

சுப்பிரமணியனால்

ஈரோடு

ஸ்ரீ கிருஷ்ணா பிரஸில், அச்சிடப்பட்டது.

1927.

...ஸ்ரீ 22-உ   விலை அணா 1.

Q25:417
N27

குமரநகர் ஜோ. வே. ர. சுப்பிரமணிய செட்டியாரியற்றிய

சாற்றுக்கவி.

கார்மேவிடுங்குமர மாநகரிற் காதலுடன்
சீர்மேவு காளிபுகழ் செப்பினான்-நீர்மேவு
சிந்தை யுளான் ராயப் பெருமாளெனுஞ் சிறியன்
பைந்தமிழாலே பரிந்து.

முகவுரை

செந்தமிழ்ச் சிவநேயர் செல்வர்காள்!

கண்ணுதற் பெருங் கடவுளுங்கழக மோடமர்ந்து
பண்ணுறத் தெரிந்தாய்ந்தவிப்ப சுந்தமிழேனை
மண்ணிடைச் சில விலக்கண வரம்பிலா மொழிபோல்
எண்ணிடைப் படக்கிடந்ததா வெண்ணவும் படுமோ.

என்ற இவைபோன்ற பலசிறப்புகளைப் பெற்ற தனித்தமிழின் சுவையறியாச் சிறியனை ஓர் பொருட்டாயெண்ணி யென் தனபுமிக்க நண்பர்கள் "ஸ்ரீ காளியம்மன் பேரிற் சில பாசுரங்கள் பாடி யளிக்கவேண்டு" மெனக்கேட்டது காரணமாக, நான் எனது அறிவிற் கெட்டியவரை சில பாடல்களை யமைத்து அப்பாசுரங்களோடு: முற்கூறிய நண்பர்களிலொருவரான "ஜோ. வெ. ர. சுப்பிரமணிய செட்டியாரவர்கள்" இயற்றிய "குமரகுருபரன் தனித்தமிழ்ப் பாசுரங்களைச் சேர்த்து அவராலேயே சிறு புத்தக ரூபமாகப் பதிப்பிவித்துள்ளேன். இந்நற்காரியத்தை மிக முயற்சியுடன் கையாண்ட எனது நண்பர் நீடூழி எம்பிரான் திருவருள் புரிவாராக.

ஓம்

ஸ்ரீ காளியம்மன் பைந்தமிழ்ப்பாசுரம்.

795
294S

விநாயகர் துதி வெண்பா

1. ஓங்காரத்தோர் பொருளை யொண்காளி சீர்த்தனையைப்
பாங்காரப் பைந்தமிழாற் பாடுதற்—கோங்குதிரு
வஞ்சக்கரனினருட் குமரனை நெஞ்சே
பஞ்சக்கரனைப் பணி.

சங்கரன் துதி.

2. பிறைசூடியபிரான் பெண்பாகங் கொண்டான்
மறைசூடியநா மகிபன் — கறைசூழுங்
கண்டன நிகழுமுக் கண்ணன் றனைமதியே
தொண்டன் றனையாளச் சொல்.

குமா குருபரன் துதி.

3. ஆறுதலை வேலவனை யாறக்கரத்தோனை
மாறுதலை யாற்கிளைய வாலிபனை—யாறுதலைப்
பெற்றான் மகன்றன்னைப் பேணித்துதிசெய்தி
லுற்றாற் றணிவீடுறும்.

ஆசிரியர் துதி.

கட்டளைக் கலித்துறை.

4. துப்பா ரருந்தமிழ்க் கொற்றவன் வைத்தியஞ் சோதிட
தப்பாதறிந்தவன் றூயவன் றாயொடு தந்தையுமா [முக்
யிப்பா ரிடையடி யேனுய்யச்செந்தமி ழீழ்ந்தவனை
மப்பாவெனும் பெயர்த்தேசிகன றனையணிகுவேனே.

அவையடக்கம்

5 தழைபுறுகள்ளி தனிற் றேன்றகிலை
விழைவுடன் கொள்வான்—பிழைகருதார்
ஈனனுமென்வாயி னிற்பிறக்கு மாகாளி
யானுள்கீத மதில்.

ஸ்ரீ காளியம்மன் துதி

எழுசீராசிரிய விருத்தம்

1 பெருமைசேரமுதே பேரின்பமணியே
பெண்ணரசே யெனதுயிரே
பிரியமாமலரே பெட்புறுமகளே
பேணிடுமென திருவிழியே
யருமைசேருயிர்க ளனைத்தையும் புரக்கு
மன்னமே பாதாவணங்கே

125267
-600 0

[illegible]விலாப்புகழே யன்புகூர்வடிவே
[illegible]னந்தமே பெருஞ்சுகமே
கருணைசேர்நலனே கதிர்பெறுமறிவே
கற்பகமே திகழறமே
கருதிடுந்திருவே கமழ்ந்திடுமணமே
கற்கண்டே சுவைக்கனியே
ஒருமைசேர்மனமே யுயர்ந்திடுங்கதியே
யுண்மையே யுன்னதமதியே
[illegible]ங்கை சூழ்குமரா புரியினிற்குடியா
யோங்கிடுங் காளியே யுமையே.-

(காஞகண்கா கூஷியே என்ற வர்ணமெட்டு.)

பல்லவி.

2 கோவிற்சிங்காரமே—கொற்றியள்சேர் கோலமொளிரும் (கோ)

அநுபல்லவி.

கோடிசெலவாயிருக்கும் மாடிநலமாயிருக்கும் (கோ)
*கோடகமேநிற மேவ‡யமேநல
வாடகமேநய மேவளமேபல (கோ)
குணமுற்றயன்றன துலகைத்தொடுவது
வணம்பெற்றிடுமேகி லுலகத்துறுவது (கோ)
குலவுமுத்துகள் பலவும் பொதிந்திடும்
அழகிலற்புதத் தூண்கள்பெருந்திடும் (கோ)
குளைகடற் பூவினி லுரைசெயு நான்விரல்
விரைவுடனிற்றிடும் பரிசினை யுடையது (கோ)
கொத்தா ராருமல ரமைந்திடு வனஞ்சமீ
பத்தே புடையது பெருமிதமடைவது (கோ)
குவடோ மலையோ வெனமன மலைவது
நவமோ சுவலோ வெளிதிசை பரவுது (கோ)
கூறுஞ்சோதிப் பிரபலம்
நேருங்க்யாதிக்குறைவிட (கோ)

சரணம்.

கோதில்லாத மண்டபத்திற் கோசாரு றைவரே
கொற்றவம்மை காட்சிக்குக்கூ டிப்பலர்நி றைவரே
தீதில்கவி வல்லவர்முற் சீரெனவ றைவரே
தேருமிதற் கேயிணையி லையெனவ றைவரே
தேவமொழியே முழங்குங் கோவில்—நிறை
தேஜஸோட னேயிலங்கும் பூவில்—அதி
காரணங் கடானிகழுந் தாவில்—புக
ழாரணஞ்சொல் காளிதனின் மாவில்

---

*கோடகம்-புதுமை-நிறம்-பிரகாசம் ‡வயம்-வலிமை-ஆடகம்-பொன்

கார்நிறச்சூலி பாதம்
ஆகுமெய்ஞ்ஞான போதம்
வார்பெருமாளின் கீதம்
நாடித்திகழுங் காதம்—ஆஹா (கோ)

திருப்புகழ் சந்தம்

தன தந்தன தந்தன தந்தன
தன தந்தன தந்தன தந்தன
தன தந்தன தந்தன தந்தன

3 உலகம்புக ழன்புடை யம்மையே
னகம்வந்துறு மம்மணி தொண்மறை
யுறையுங்குண சுந்தரி யப்பிகை பெருவாரி
யுள்வுன்செய லெங்ஙன மெண்ணிட
முடியும்மரு டந்திடு பெண்மணி
யுளமும்முறை யும்முட லும்மிவை யறியாதோய்
கலகம்புரி¶யஞ்செண ரஞ்சுக
னியருந்துத வம்பெரு§மந்தணர்
கருதுஞ்செய புண்ணிய நன்மணி யுயர்தேவி
கலைகண்மிக வுந்தெரி செந்தமி
ழுரும்பண்டித ரின்றுதி கொண்டிடு
கடிமிஞ்சுக ணங்கொள ணங்கெனு மெனதாவி
அலகில்பல வஞ்சக மங்கையர்
அமுதப்புரை சொல்லினர் கொங்கையி
னழகுங்கொடு நெஞ்சுவ பங்கொளுநம் விலைமாதர்
அருகும்பவவெம்மை யமைந்திடு
சொலவஞ்சு தொழில்புரிபுன்மைய
ரருகுஞ்செல நண்ணுமனந்தனை யடக்காயோ
நலமும்புனை நல்லவர் சங்கமு
மறிவுந் தமிழ் வன்மையு மூண்மையு
%நயமின்†றரி சன்னமுந் தந்திடு பரிகாளி
நனிமங்கல முஞ்சிறப் பும்பெறு
குமரன்பெயர் கொண்டுவி ளங்குமூர்
‖நயந்தங்கவெ மூந்தரு ளந்தரி யுமையாளே

தனன தனதன தனன தனதன
தனன தனதன தனன 'தனதன
தத்தத் தத்தன தத்தத் தத்தன
தத்தத் தத்தன தத்தத் தத்தன தனதான.

4 பெருகு புமிசை சகல பொருளினு
முறையு மெனதா சிநல முறுகுணம்

¶அஞ்செணர்—ஐவாயவேட்கையாமைவர். §அந்தணர்—அழகிய தட்பத்தினையுடையவர். %நயம்-இன்பம் †தரிசன்னம்-தரிசனம் விரித்தல் விகாரம் ‖நயம்-பயன்.

பெற்றுப் பொற்புனு மெச்சத் தக்கநி
னற்புப் பத்தர்த மக்குப் பொற்கரங் தருவாளே

திருவு மனையொடு மகவு மிழந்திருள்
செறியு விலங்கின மலையும் வனமிசை
திக்கற் றுற்றவ ரொப்பச் சுற்றிடு
ளத்தைக்கட்டிடல் சத்தித் தூர்க்கையின் பொருட்டாமே.

ஒருவு முனிதிரு பதும தனைவிடப்
பிறவு முளதுனை யெனவு நினைவிலை
ஒப்புப் பொற்றிலன் குற்றக் துற்றவொ
துக்கிச் சிற்றறி வற்பப் பித்தனைப் புரப்பாயே

மருவு புகழுறு குமர நகரினில்
அழகெ னுமாலய மெழுந்த குமரியிம்
மக்கட் குற்றிடு கட்டக்கட்டையொ
டித்துப் பற்பமெ னச்சுட் டிட்டிடு முமையாளே

(கற்பூர தீபாராதனையே எ. வ. மெ)

பல்லவி

5 எக்காலுங்காளீ! நீ துணையே—தினம
எனதருகவி மலரணிகுவன் வரமருள் (எக்கா)

அநுபல்லவி

துக்கமதாகிய துகள்வினை சூழ்ந்தேன்
மிக்கிடு கவலைக ளகமுறை வீழ்ந்தேன் (எக்கா)

சரணம்

தேவாதி தேவரெல்லாம் பாவாயு னேவல்செய்வர்
திரி சிங்காரி புதாரி—பொற
றினகரனுறுபுவி கனவென் வறியினு
மனந்திட மடைந்திலனை னையுனை மறந்திலன் (எக்கா)

வீராதி வீரிசூரி தீராதி காரி நாரி
வேதா ளிமாதா கைநீதா—மிக
விரைவினி லரியநின் சிறியனைப் பரிவொடு
குறைகடற் றுயரினி விருந்தகற்றிடு மினி (எக்கா)

சாமுண்டி யாளியூர்தி யேகண்டிகையே ஜெய
சாவி யேநீவி மாசூலி—இத்
தலமிசை யுனைவிடப் பலதெய்வ மிலையிலை
வலம்பெறு பகவதி சிலம்பணி யருமணி (எக்கா)

தாழ்பெருமாளின் கீதம் கேள்குறை தீரவெல்லாம்
தாயே சவாயே காநீயே—புகழ்
தழைத்திடு நலமுறு குமாமா நகரது
செழித்திட வுவந்தெழுந் தருளிய குமரியே (எக்கா)

(கழுகாசலம் வாழ்முருகோனே என்ற வர்ணமெட்டு)

கண்ணிகள்.

குமாரபுரிவாழ் மாதங்கி—பய
கோரந்துறுவடிவேதங்கி
கோமளதேவி—பேர்புகழ்மேவி
புகழ்சேர் மறையே யுமையாளே—சுக
போகப்புணர்வினன் றனையாளே
பூரணிகாளி—சீரணி நீலி
எனையாள்மணியே என்டோளி—துதி
யேற்றுமகிழ்ந்திடுங் கங்காளி
எபெருந்தாயே—நீவருவாயே.
பவமே துயரே யொழிப்பாயே—இப்
பாவி மொழி செவி மடுப்பாயே
பாதகனும்நானே—காதகன்றானே
பெருநா ளுழன்றேன் புவிமீதே—சிறு
பேதைக் கருள்புரி புரிமாதே
பேர்மறையாதி—போற்றிடுஞ் சோதி
கருவா சனையைத் தடுப்பாயே—அக்
கால நெறிகயி றறுப்பாயே
கைவிடு வாயோ ஆயினீ தாயோ
பலநோய் கழியப் பணிந்தேனே—யுன்
பாதங்கதியென வடைந்தேனே
பாரெனைக்கண்ணால்—காரணை யிந்நாள்
பெருமாள் சாமியின்றும் பாட்டு—தன்னைப்
பேணிப் பகைவர்கள் தமையோடு
பேரின்பவீடு—தான்தா நாடு (குமார)

(விளங்குவதுந்தன் புகழே வேலா வேலா வேலா எ. வ மெ.)

பல்லவி

7. நினைந்திடுவாயே மனமே நீயே நீயே நீயே

அநுபல்லவி

நித்தியம் உத்தமி பொற்பாதம் நெகிழ்வுடன் கதிபெற நினை

சரணம்

பதவியு மளிப்பாளே—பண்புங் கொடுப்பாளே
பாவி திகழ்தேவி தனைக்கூவி—பலமுறை மகிழ்வோடு நினை
அறிவினுக் கறிவாவாள்—அன்பார்க் காரணவாள்
ஆதி அவள்மீதில் பதம்ஓதில்—அருந்துயரகன்றிடும் நினை
விளங்குமங்கள சிரீ—மேன்மை யலங்காரி
வேதம் திருப்போதம் வெகு சீதப்—விமலையினுயர்புகழ் நினை
பெருமாள்சாமி நேசி—பேணுமென னுல்லாசி
பேரே தனையோரே வெகு நீரே—பெருமிதமடைந்திட நினை

சென்னை-600 008
175267
Q25:41
M2

(பூரண யோகியே புளகிர்தமாகியே எ. வ, மெ.)

பல்லவி

கோமளி காளியே குணமுள்ய சீலியே

அநுபல்லவி

குமாரா புரி நீலியே

சரணம்

தேவர்கள் போற்றிடுந்-தீர மிகுந்திடும்
சீர்த்திப் பிரபல மேவிய
மூர்த்தியே விமலே — கோமளி

மாமுனி வோர்களும் மானிலத் தோர்களும்
வாழ்த்திடு மெந்தன் தீவினை
தாழ்த்திடும் நன்மைப் பேறே — கோமளி

தாயெனைக் காத்திடத் தாமத மேனம்மா
தாழ்ந்தவ னானே மனதிற்
சூழ்ந்திடுவாய் சாமுண்டி — கோமளி

வேதனை மாயையில் வீழ்ந்திடச் செய்தனை
வேண்டினேன் பெருமாள் சாமியை
ஆண்டிடும் அமுதத் தேனே — கோமளி

(ஆலவாய் மதுராபுரி எ. வ. மெ.)

கோதையே குமராபுரி நகர்க்குண்டலி கருணாகரி

அனுபல்லவி

குண்டலி கருணாகரி-புகழ் கொண்டிடுங் குணாகரி — கோதை

தொகையறா

அருட்பெருஞ் சேதியே யன்னையே தெய்வமே
யானந்தமான வடிவே
பெருமைசேர் அம்மையே பெருமான் சாமியின்
பேரின்பமான முடிவே

பல்லவி யெடுப்பு

பூவையே திரு மாதரி-புன்னைப்-போற்றினேன் பராபரி
போற்றினேனே பராபரி யெனைக்-காத்தருள் தயாபரி — கோதை

("நீகேதகுரா" என்ற சுர வர்ணமெட்டு.)

பல்லவி.

தாயே தருமோ தாளேன் நீண்டவினை
தாளேனே ஓ மானே நீ தானே கதி — (தாயே)

அநுபல்லவி.

தேவி இனியகுண
தேவி யுபாமுத
தேவி குமரபுரி
தேவி யழகுமிகு
தேவி கருணைபுரி — (தாயே)

சரணம்.

உததி சூழ்ந்த வுலகி லதிக கஷ்ட முற்றனன்
கமல மனையமுக
விமலை பெருமாள் துதி
கமழு முனிருசெவி (தாயே)

(ஓங்காரப்புகழ் ரீங்காரத்தோனி என்ற வர்ணமெட்டு)

11 கண்டே நற்சுவைப் பண்டே யித்ததி
கண்டே யெனையாள்வாய்
கண்டேன் நின்புகழ் கொண்டே னற்புதம்
காட்சி தந்திடவா வா வா
எந்தாய் நீயலதிந்தப் புவியினி
லெங்குந்துணை காணேன்
நொந்தேன் கண்மணி வந்தாள் பெண்மணி
நூலிற் பொலிவாய் நீ நீ நீ
ஆங்காரத் தரி தாங்கப்பவனி
யாங்கே வந்திடுவாய்
தீங்கே செய்திடு மோங்கார் தூர்க்குணத்
தீயர் தங்களைக் கா கா கா
தாயே சுந்தரி நீயே யெங்களுக்
தனிமா மணிவிளக்கே
காயும் பவநெறி மாயும் படியே
காளிதேவியே செய் செய் செய்
தேயும் நுண்ணிடை மாயப் பெண்மொழி
தேனென் றலை வேணே
ஆயுஞ் சைவத் தூயப் பெருநெறி
யாளர் தங்களின் தாய் தாய் தாய்
செந்தேன் கமழுங் கொங்கார் குமரச்
சீர்நகர் வாழ்ந்துறை வோய்
சந்தப் பெருமாள் சாமி யோதிடுஞ்
சங்கீதந் தனைக் கேள் கேள் கேள்

எழுசீராசிரிய விருத்தம்.

12 திங்களா வணிதனில் தப்பாது சிறப்பொடு
திருவிழாச் செய்துமின்னும்
தீயிடைநடந்தும் நின் திருப்புகழ் பாடியும்
திகழ்கின்ற பொங்கல் வைத்தும்
மங்களமாகவே மாமலை யெனச் சொலும்
மணித்தேர் நடத்திவந்தும்
மனமளவெனப் பாணம் யாவரும் வியப்புற்று
மனமகிழவே விடுத்தும்

எங்கணும் நின்பெயர்பரப்பியுமின்புற்
    றிருப்பமுன்னடியை மறவோம்
இந்நகரவாசிகள் என்னபிழை செய்யினும்
    எந்திழையே பொறுத்து
மங்கிடா நின்னருள் தந்துதவி செய்குவாய்
    மணவீர தீர சூரி
வளமருவு குமரமா நகரது செழித்திட
    வளர்ந்தோங்கு காளியுமையே

குமாரகுருபரன் கனித் தமிழ்ப் பாசுரம்.

(இப்பாசுரங்கள்கோமாரபாளையம் ஜோ.வே.ர.சுப்பிரமணியனால் இயற்றப்பட்டவை)

(கமலாக்ஷி என்ற வர்ணமெட்டு.)

பல்லவி.

கதிர்வேல—கதிதா இதுதரு   கதிர்

அநுபல்லவி

காலன் றனக்கு நிகர் கண்டகர்தமை வணக்கத்த   கதிர்

சரணம்.

சுந்தர வள்ளிமாதைச் சுகித்திடும் லோலா
கந்தா குகாமுருகா காரு உமைபாலா
சந்த தமுந்தனைச் சாற்றினேன் சீலா
சந்த மமைந்து மிகுந்து பணிந்திட   கதிர்
பத்தர்கள் பணிந்திடும்-பதமதைத் தாராய்
நத்து மெந்தன் துயர்-நலிந்கிட வாராய்
பித்தன் காதினில்-பிரியமாய் நோராய்
பிரணவமெனுமதைத்-திரமுடனுரைசெய்த   கதிர்
மங்களமாக-மகிழ்ந்தியான் பாட
அங்கம் பரவச-மசைந்தவரா ட
பாலசுப்பிரமண்யன்-பலமகன்றேடப்
பதியினிற் சதமெனத் துதிசெய்தேன் கதிநீயே

(நடராஜதயாநிதியே என்ற வர்ணமெட்டு)

பல்லவி

நம்பினேன் நாரணன் மருகனே
நம்பிமகள் மணந்தோனே—சரவணனே.   நம்பி

அநுபல்லவி

வெம்பினேன் வினையதைத் தீர்த்தருள்வாய்
தும்பிமுகனுக் கிளையவறுமுகனே   நம்பி

சரணம்

அந்த கனெனை வந்தணுகா வரமருள் செயத்துதி
    செய்தேன் சிறுவன்
பந்த பாசங்களில் நொந்து மனங்கலங்ப் பக்திவிதந்
    தெரியேனே அடிமையான

175247

பாலன்மேல் பகையாகுமா
பாலசுப்ரமண்யனே
பாதுகாப்பாயே — நம்பி

(தேவர் மேச்சுஞ் சீலா எ. வ. மெ.)

கண்ணிகள்

பாரோர் புகழ் — நேசா
பழனிமலை — வாசா—இந்த
பார்தனிற்கொடு மாதருதவு
தூரத்தகல வேது நீதான் — பாரோர்

பதிதனிற் கதி — நீயே—பசு
பதியருளுஞ் — சேயே—முனம்
பாண்டவர்தலை — யாண்டருளுங்கோ
தண்டம பற்றுயிர் — மாண்டன் மருகா — பாரோர்

முத்தமிழ்க் கவி — புனைவாய்—உன்
பக்தனுக்கருள் — தருவாய்—நான்
முத்தி மனையை — நத்தி வினையின்
பற்றறுத்திடில் — வெற்றி பெறுவேன் — பாரோர்

சரவண பவ — குகனே—என்மேல்
தயைபுரியறு — முகனே—பால
சுப்ரமண்யன் — செப்பு மொழியை
செப்பியென்மு — னிப்பொழு தேவா — பாரோர்

(சித்தாதி தேவர்கள் நித்தம் நித்தம் எ. வ. மெ.)

கண்ணிகள்

கங்கை மதிபுனை சங்கரனீன்ற
செங்கை வடிவேலனே—என்னேரில்வா
யிங்கிதமாய்ச் சீலனே

பாச வலை வீசும் வேசிய ராசையால்
ஊசிகாந்தம்போலானேன்—சிறுவன்
மோச மடைய லானேன்

இந்த்ராதி தேவர்கள் சந்ததம் போற்றிடுஞ்
சுந்திரக் கந்தா குகா—ஆற்றியே
பந்தமறுஞ் சண்முகா

சித்திர-மான்கள் உத்தமியாளிடம்
நத்தி மாலைத் தின்றவா—சுப்ரமண்யன்
செப்புந் துதி கொண்டவா — கங்கை

(செந்தாழம்பூ வின்றேங்கமழ என்ற வர்ண மெட்டு)

5. கார்த்திகேயன் கடம்பா சண்முக
கரிமுகனுக் கிளையவா
காமவினைகளறக் கனவிலுமுனை துதித்தேன்
கஞ்சமலரடி வஞ்சமிலாமலே
தஞ்சமெனப்பாடி கெஞ்சினேன் தந்தருள் (கார்த்தி)

கோவர்த்தன கிரியெடுத்து கோகுலந்தனைகாத்த
கோபாலன் றன்மருகா கோடி தெண்டஞ்செய்தேன்
கோலக்குமரனே சாலப்பெரியோனே
பாலக்குழந்தையை யானவித்தகி (காத்தா)
அமரர்தேவர் மூவருடன் அருணகிரியைக்காத்தவா
அருணகிரி நாதரின் ஆசைவார்த்தைக்குகந்தாய்
பாதிமதியணி பரமன்மகனே
பாலசுப்ரமண்யன் பாடினென் குகனே (காத்தா)

இராகம் செஞ்சுருட்டி தாளம் ஆதி

6 பழனிமலை மீதில் வாழும் பாலதண்டாயுத
பாணி யென்னைப் பேணியருளாலமுண்ட-
வேணியனீன்றவே லாயுதனே-கானில்
வேங்கை மரமாய் வளர்ந்தாய் சுகனே
வெற்றிபெறத் திட்டமயி லூற்றவா கெம்பீரா
கற்றவர்கள் நத்திவாம பெற்றிடுஞ்சிங்கார
கருணைபுரியும் தாதா
அருணகிரிக்கு நாதா—கண் பார் பார் பார்
செந்தமிழ்சூரிய கந்தா சுந்தரவேதாந்த—ஜோகம்
சொந்தமல்ல விந்தையிது உந்தன்பாதந்தா
பக்திபதி யாயமார்வந்துசூழக—கோருஞ்
சிந்தனையைத்தீர்த்த திருச்செந்தில் வேலா
பத்தன் துயர் பெற்றிடுக வுத்தமமோர் வீரா
இக்கணத்திலித்தரையென் பக்கம்வரும் தீரா
இப்படிச்செய்யலாமா—பால
சுப்ரமண்யப் பூமா இது கேள் கேள் கேள்

முற்றிற்று சுபம்.

ப	க	வ	தி	யே	க	ரு	ணை
க	ற்	ப	க	நீ	தா	தி	ரு
வ	ப	ரா	தி	ய	மா	தா	க
தி	க	தி	ச	ம	ய	நீ	யே

சுழிகுளம்.

பாட்டு

வஞ்சித்துறை

பகவதியே கருணை
கற்பக நீதாதிரு
வபாரதி யமாதாக
திகதி சமய நீயே

குறிப்பு:—பகவதியே கற்பகம் நீ அமாதா சமயம் நீ அபாரதி கதிகதி கருணை திருதா எனக்கொண்டு கூட்டிப் பொருள் கொள்க.